ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆசான் அரங்கமகா ஞானியரின் அறிவுரை அருளாசி விளக்கம்**

12.04.2025

1. அருமருந்தாகி நின்று காத்தருளும்
ஆறுமுகப்பெருமானை தொழுதேற்றி
வரமென அரங்கமகா ஞானியர் யானும்
வழங்குவேன் ஓங்காரக்குடிலின் நிர்வாகிகளும்

2. தொண்டர் பெருமக்களும் கேட்க
இனிதே அரங்கன் யான்
அறிவுரை ஆசி விளக்கமாக
வகைபட அன்பர் பெருமக்கட்கு அருளுவேன்

3. அருளவே அரங்கன் யான்
இந்த கலியுகத்தில் வந்த நோக்கம்
பெருமைபட என் தொண்டர் பெருமக்களாலும்
எனை பின்பற்றி வந்த

4. அன்பர் பெருமக்களாலும் பூர்த்தியாகவே
ஆறுமுகன் என்னை ஜோதியில்
இரண்டறக் கலக்கச் செய்து
வகைபட இவை பிறவி

5. உங்களுக்கெல்லாம் வல்லமைபட வழிகாட்டவே
அருட்சுவடியாக இங்கு அருளி நிற்க
அப்பனே என் அன்பர்கள் கேட்க
அரங்கன் யான் மகிழ்ந்து

6. இந்த அறிவுரை ஆசியை அருளுகின்றேன்
மிகைபட என்பால் மேலான மகாசூட்சும
மானச பூஜை கொண்டு
என்னை நித்தம் வணங்குவோர்க்கு

7. அரங்கன் யான் அகத்துள்ளும்
அவர்கட்கு ஜோதியிலும்
யான் காட்சியாகவும்
அவர்கட்கு தக்க பலமாய்

8. அறிவுரையாகவும் ஆலோசனையாகவும்
இறங்கி அருள் செய்வேன்
அன்னதனால் அரங்கன் என் மகாசக்தி
நான் வந்த நோக்கம் இந்த குடிலிலும்

9. என் நாமத்தை போற்றி என்பால்
தொடர்பு கொண்டு பலபிறவி வழி
எந்தனொடு ஞானத்தின் வழி
தொடருகின்ற அன்பர்க்கெல்லாம்

10. மகா சக்தியாய் நிரம்பியிருக்க
அன்பர்களுக்கு எந்த கலக்கமும் வேண்டாம்
அன்பர்களிடையே பொருளாதாரத்தைச் சார்ந்தோ
நடவடிக்கைகள் செயல்பாடுகள் இதை சார்ந்தோ

11. சுணக்கமோ சோர்வோ இருந்தால்
அத்துணையும் அரங்கன் என் கருணையாலே
நீக்கம் செய்து அவர்கட்கு பாதுகாப்பாகவும்
சர்வ பலமாகவும் மாற்றம் பெறக் கூடும்

12. அன்னதனால் அரங்கன் யானே
பரிபூரணமாய் இருந்து
மகா சூட்சுமமாய் வழிநடத்த
ஓங்காரக்குடிலின் செயல்கள் அனைத்தும்

13. என் கருணையோடே நடந்து வருகின்றது
அன்னதனால் அன்பர் பெருமக்களே
முழு சரணாகதி கொண்டு
அரங்கன் என்பால் நித்தியபூஜை செய்வதோடு

14. யான் வகுத்த சுத்த சைவ
சன்மார்க்க நெறிமுறையை ஒருபோதும்
நழுவவிடா வண்ணம் காத்து பின்பற்றி வர
அவர்களுக்கெல்லாம் அரங்கன் யான்

15. எண்ணுகின்ற அக்கணமே இறங்கி அருள் புரிவேன்
அவர்கள் நோக்கங்கள் நிறைவேறவும்
வேண்டுதல்களெல்லாம் வெற்றி கொள்ளவும்
மகா பலமாய் இருந்து அருள்புரிவேன்

16. அன்னதனால் குடில் தொண்டின்
தொடர்பு வழி சன்மார்க்கத்தின் நெறி வழி
தர்மத்தை கைக்குள் வைத்து
அரங்கன் யான் சொன்ன வண்ணம்

17. ஒருவருக்கேனும் தர்மத்தை வழங்கும்
சக்தி கொண்டு இருந்தால்

அவர்கட்கெல்லாம் அக்கணமே
அரங்கன் யான் இறங்கி அருள்புரிவேன்

18. அன்னதனால் அன்பர்களெல்லாம்
எந்த சூழலிலும் சோர்வு கொள்ளாத வண்ணம்
ஞானிகள் பூஜையை செய்து கொண்டும்
இயன்ற வண்ணம் தர்மத்தை செய்து கொண்டும்

19. ஓங்காரக்குடிலின் தொடர்பை
தொடர்ந்து ஏற்படுத்தி கொண்டு
வகைபட விரும்புகின்ற வண்ணம்
வல்லமைபட அவரவர்கள் தேட்டு வழியும்

20. ஆவணத்தின் வழியும் தொடர்பில் இருந்து கொண்டே
பிரணவக்குடிலின் தொடர்பிலும் ஞானிகள் பூஜையிலும்
அவரவர்களால் இயன்ற வண்ணம்
முக்கால பூஜையில் இயன்ற வண்ணம்

21. ஒரு கால பூஜையேனும் செய்து கொண்டு
உயர்வான தர்மதொண்டில் இருந்தால் போதும்
அவர்கட்கெல்லாம் இயல்பாகவே
எண்ணுகின்ற வண்ணம் எல்லா சித்திகளும் கூடி

22. இவை பிறவியில் வந்த நோக்கம் பூர்த்தியாக
தொண்டர் பெருமக்களெல்லாம்
அரங்கன் யான் முன்பு ஆசி வழி
தந்த வண்ணம் அவரவர்க்கும்

23. இனி பிறவாத பேறு
இந்த பிறவியே சித்திக்கும்
பிரணவக் குடில் தொடர்பு கொண்டு
எவரெல்லாம் அரங்கன் சீடர்களென

24. அடையாளம் கொண்டு விட்டார்களோ
அவர்கட்கெல்லாம் இனி பிறவா பேறு உறுதி உறுதி
அரங்கன் யான் அருளிய
அறிவுரை ஆசி விளக்கம் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி